ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2087/91 - 2018 සැප්තැම්බර් මස 07 වැනි සිකුරාදා - 2018.09.07

*2087/91 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

யடிநுவர பிரதேச சபை

**பொழுதுபோக்கு வரி விதித்தல்**

*(267 ஆம் அத்தியாயமான)* பொழுது போக்கு வரிக் கட்டளைச் சட்டத்தின் *2* ஆம் பிரிவின் (I) ஆவது உப பிரிவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினடிப்படையில் யடிநுவர பிரதேச சபையின் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் அதன் இரண்டாவது உப பிரிவின்படி அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது அதன் உப பிரிவின் பிரகாரம் இத்தால் வெளியிடப்படுகிறது.

ஆர். எம். பீ. எஸ். ரத்நாயக,
செயலாளர்
பிரதான, கல்வி மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பல்லேகலை,
*2018*, பெப்புருவரி *14*.

**தீர்மானம்**

*1946* ஆம் ஆண்டின் *12* ஆம் இலக்க, பொழுது போக்கு வரிக் கட்டளைச் சட்டத்தின் *(2) 1* ஆம் பிரிவின் மற்றும் *1984* ஆம் ஆண்டின் *37* ஆம் இலக்க, பொழுதுபோக்கு வரி திருத்தச் சட்டம் என்பவற்றின்படி யடிநுவர பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் பொழுது போக்கு வரிகளை அறவிடும் பொருட்டு நுழைவுச் சீட்டுக் கட்டணத் தொகையில் 10% இனை பொழுது போக்கு வரியாக அறவிடுவதற்காக பிரதேச சபைகள் சட்டத்தின் *9(3)* ஆம் பிரிவில் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

*09-612/1*

1A - PG4207 - 32(2018/09)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**மத்திய மாகாண மாகாண சபை**

குண்டசாலை பிரதேச சபை

**பொழுதுபோக்கு வரி விதித்தல்**

(267 ஆம் அத்தியாயமான) பொழுது போக்கு வரித் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (I) ஆவது உப பிரிவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினடிப்படையில் குண்டசாலை பிரதேச சபையின் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் அதன் இரண்டாவது உப பிரிவின்படி அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது அதன் உப பிரிவின் பிரகாரம் இத்தால் வெளியிடப்படுகிறது.

ஆர். எம். பீ. எஸ். ரத்நாயக,
செயலாளர்
பிரதான, கல்வி மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பல்லேகலை,
2018, பெப்புருவரி 14.

**தீர்மானம்**

1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பொழுது போக்கு வரித் கட்டளைச் சட்டம் (2) 1 ஆம் பிரிவு மற்றும் 1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, பொழுதுபோக்கு வரி திருத்தச் சட்டம் என்பவற்றின் படி குண்டசாலை பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் பொழுது போக்கு வரிகளை அறவிடும் பொருட்டு அது சினிமா காட்சியாக இருக்கும் போது அதற்காக அனுமதிக்கப்படுவோரிலிருந்து அறவிடப்படும் கட்டணத் தொகையில் 7.5% வரியும் வேறு அனைத்து வித நிகழ்வுகளின் போதும் அனுமதிக்கப்படுவோரிடமிருந்து அறவிடப்படும் தொகையில் 20% வரியும் அறவிடுவதற்காக பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) ஆம் பிரிவில் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

09-612/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.